OS.No. :69/2023

நாள் : 02.09.2025

பி.வா.சா. :1

பெயர் :நசீர் அலி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அப்பா அந்நிய செலவாணி கடை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல அதில் வேலை பார்த்தார். சிங்கப்பூரில் என் அப்பாவிற்கு வீடு உண்டு என்றால் சரியல்ல. வாதி எனக்கு என் சொந்த அண்ணன். நான் அபுதாபிக்கு சென்றுள்ளேன். வாதி தான் என்னை அழைத்து சென்றார். இரண்டு மாதங்கள் அங்கிருந்தேன் வேலை தேடிபார்த்தேன் கிடைக்கவில்லை. திரும்பி வந்துவிட்டேன். 1ம் பிரதிவாதி அக்பர் அலி என்னுடன் அபுதாபி வந்தாரா என்று நினைவில்லை. நான் அக்கவுண்ட்ஸ் படிந்திருந்தேன். அந்த வரிசையில் வேலை தேடினேன் கிடைக்கவில்லை திரும்ப வந்துவிட்டேன். என் அப்பாவின் Provident fund பணத்தை 1998லேயே என் அப்பாவே எடுத்து செலவு செய்துவிட்டார். அந்த தொகையில் ரூபாய் 17 லட்சத்தை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. என் அம்மாவின் நகைகளை எடுத்து எனக்கும் அக்பர் அலிக்கும் ஆளுக்கு பாதி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என் அப்பா அம்மா பெயரில் இங்கு வங்கிகளில் டெபாசிட் இருந்தது என்றாலும் அதை நாங்கள் பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. என் அப்பாவின் சொத்துக்களை எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் என் அப்பாவே பிரித்து கொடுத்து விட்டார் என்றால் சரிதான். தற்போது தாவாவில் கண்ட 2 ஐட்ட சொத்துக்கள் மட்டும் தான் எங்களுக்கு உள்ளன. என் அப்பா, அம்மா சொத்துக்களில் அவர்கள் உயிருடன் இருக்கும் போது எங்களுக்கு பாகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி தனிக்குடித்தனம் போக என் அம்மா அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். பிவாசா1க்கு பிறகு தான்

சீர்சாமான்களை என் அம்மா கொடுத்தார் என்றால் சாட்சி ஜமாத்தார் சொன்னதால் அப்படி செய்தார். 1993ம் ஆண்டு எனக்கு சுமார் 15 வயதிருக்கும். பிவாசா 4 முதல் 13 வரையான ஆவணங்கள் வீட்டிலிருந்த ரசீதுகள் என்று சொன்னால் சாட்சி நான் பாதுகாத்து வைத்திருந்த ரசீதுகள் என்கிறார். பிவாசா 4 முதல் 13 வரையான ஆவணங்கள் காலகட்டத்தில் என் அம்மா உயிருடன் இருந்தார். அம்மா, அப்பாவின் பணம் தான் செலவு செய்யப்பட்டது என்றால் நாங்களும் சேர்ந்து தான் செலவு செய்தோம். எனக்கும் அக்பர் அலிக்கும் வேலை வருமானம் கிடையாது என்றால் சரிதான். அதனால் செலவு செய்ய முடியாது என்றால் சாட்சி என் மனைவியின் நகை, 1ம் பிரதிவாதியின் மனைவி நகைகளை அடமானம் வைத்தும் கடன் வாங்கியும் செலவு செய்தோம்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

M. Nali

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

2/9/14

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை